டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 16.07.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 024 - Madurai | Online Edition

# கரூரிலிருந்து இங்கிலாந்துக்கு ரூபாய் இரண்டரை கோடி மதிப்பிலான வீட்டு உபயோக ஜவுளிகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது




புது தில்லி, ஜூலை 15

இந்தியா – இங்கிலாந்து நாடுகளுக்கு இடையே விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது. இந்த நிலையில், இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்காக கரூரிலிருந்து சென்னைக்கு இன்று 4 வாகனங்களில் இரண்டரை கோடி ரூபாய் மதிப்பிலான படுக்கை விரிப்புகள், துண்டுகள், சமையலறையில் பயன்படுத்தப்படும் ஜவுளி பொருட்கள், திரைச்சீலைகள் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டன.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் அயல்நாட்டு வர்த்தக கூடுதல் தலைமை இயக்குநர், கோவை அலுவலகம் மற்றும் கரூர் ஜவுளி உற்பத்தியாளர்கள், ஏற்றுமதி யாளர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட மாவட்ட ஆட்சியர் முத்துக்குமரன், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் அயல் நாட்டு வர்த்தக கோவை அலுவலக கூடுதல் தலைமை இயக்குநர் டி ஸ்ரீதர் ஆகியோர் இந்த வாகனங்களை கொடியசைத்து அனுப்பி வைத்தனர். பின் செய்தியாளர்களிடம் பேசிய டி ஸ்ரீதர், இந்த ஒப்பந்தத்தின் மூலம் கரூரிலிருந்து ஆண்டு தோறும் சுமார் 1,600 கோடி ரூபாய் அளவிற்கு வீட்டு உபயோக ஜவுளிகள் ஏற்றுமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார். இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு சுங்க வரிச் சலுகைகள், புதிய வர்த்தக வாய்ப்புகள் கிடைக்கும் என்று அவர் கூறினார். வீட்டு உபயோக ஜவுளி ஏற்றுமதி மையமான கரூருக்கு புதிய வளர்ச்சிப் பாதையை உருவாக்கும் என்று டி ஸ்ரீதர் குறிப்பிட்டார்.

# தமிழகத்தில் 19 மாவட்டங்களில் வெப்ப அலை வீசும்!

சென்னை, ஜூலை 15

தென்னிந்திய பகுதிகளில் தென்மேற்கு பருவமழை பலவீனமாக உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் வேலூர், மதுரை உள்ளிட்ட 19 மாவட்டங்களில் வெப்ப அலை வீசும். 17-ம் தேதி முதல் பருவமழை படிப்படியாக முன்னேற வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, தென்னிந்திய பகுதிகளில் தற்போது, தென்மேற்கு பருவமழை பலவீனமாக உள்ளது. இதற்கு, பூமத்திய ரேகையை தாண்டி வீசும் தென்மேற்கு காற்று பலவீனமடைந்திருப்பதால், மேற்கு அரபிக்கடல் பகுதியில் வழக்கத்தைவிட குறைந்த வலிமையுடன் கீழ்மட்ட ஜெட் காற்று காணப்படுவதும், அதனுடன் வளர்ச்சி அடைந்து வரும் எல்நினோ நிலையும் இணைந்து முக்கிய காரணங்களாக உள்ளன.

இதன் விளைவாக, அரபிக்கடலிலிருந்து ஈரப்பதம் வருவது குறைந்துள்ளதால், கேரளம், தமிழகம், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் மழைப்பொழிவு குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மேலும், பலவீனமான பருவமழை சுழற்சியுடன், எல் நினோவால் ஏற்படும் பரந்த அளவிலான கீழ்நோக்கி வீசும் காற்று மேகங்கள் உருவாவதைத் தடுத்துள்ளது. இதன் காரணமாக பெரும்பாலான இடங்களில் மேகமற்ற வானம் நிலவி, சூரியக் கதிர்வீச்சு அதிகளவில் தரையை அடைவதால், வழக்கத்தைவிட அதிகபட்ச வெப்பநிலை உயர்ந்து பதிவாகி வருகிறது.

இதனையடுத்து, உள் தமிழகத்தின் சில பகுதிகள், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானாவின் சில பகுதிகளுக்கு சென்னை வானிலை ஆய்வு மையம் வெப்ப அலை எச்சரிக் கையை வெளியிட்டுள்ளது.

காற்று பகுப்பாய்வின்படி, தற்போது பலவீனமாக உள்ள கீழ்மட்ட ஜெட் காற்று, ஜூலை 17 முதல் படிப்படியாக வலுப்பெற வாய்ப்புள்ளது. இதன் காரணமாக, பூமத்திய ரேகையைத் தாண்டி அரபிக்கடலிலிருந்து ஈரப்பதம் வருவது அதிகரித்து, தென்னிந்திய பகுதிகளில் தென்மேற்கு பருவமழை மீண்டும் படிப்படியாக வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் விளைவாக, 17-ம் தேதி முதல் கேரளம், கர்நாடகம், தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் மழைப்பொழிவு படிப்படியாக அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. மேகமூட்டம் மற்றும் மழைப்பொழிவு அதிகரிப்பதால், தரையை அடையும் சூரியக் கதிர்வீச்சு குறைந்து, அதிகபட்ச வெப்பநிலை மீண்டும் இயல் பான நிலைக்கு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் நாளை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி பாரன்ஹீட் வரை உயரக்கூடும். குறிப்பாக தமிழகத்தில் நாளையும் திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, கள்ளக் குறிச்சி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருச்சி, அரியலூர், பெரம் பலூர், சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# VCS-R நிரலாக்கத்துடன் தரவு பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தலுக்கான செயல்சார் பயிற்சி

கோயம்புத்தூர், ஜூலை 15

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தகவலியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தின் சார்பில் 2026 ஆம் ஆண்டு ஜூலை 14 முதல் 17 வரை 'R நிரலாக்கத்துடன் தரவு பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல்' என்ற தலைப்பில் நான்கு நாள் செயல்சார் பயிற்சியை கோயம் புத்தூரில் உள்ள தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தில் (CPMB&B) நடத்த திட்டமிடப்பட்டது.



பயிற்சித் திட்டத்தின் தொடக்க விழா 2026 ஜூலை 14 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மைய கருத்தரங்க அரங்கில் நடைபெற்றது. இப்பயிற்சியில் கற்பகம் உயர்கல்வி அகாடமி, இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (ICAR-IARI), புதுதில்லி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகிய கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள், முதுகலை, முனைவர் பட்ட ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறையின் பேராசிரியரும் தலைவருமான டாக்டர் எல்.அருள், வரவேற்புரை வழங்கி, தற்போதைய உயிரியல் மற்றும் வேளாண் ஆராய்ச்சிகளில் R நிரலாக்கம், புள்ளியியல் தரவு பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தலின் அவசியத்தை வலியுறுத்தினார்.

தொடர்ந்து, பங்கேற்பாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மைய இயக்குநர் டாக்டர் ந.செந்தில், பயிற்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளை விளக்கி, நவீன ஆராய்ச்சிகளில் கணினி சார்ந்த பகுப்பாய்வுக் கருவிகள் மற்றும் தரவுக் காட்சிப்படுத்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

சிறப்புரையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் (AEC&RI) முதல்வர் டாக்டர் பி. ராஜ்குமார் வழங்கினார்.

ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சிக்கலான உயிரியல் தரவுகளை துல்லியமாக பகுப்பாய்வு செய்து விளக்குவதற்கு R நிரலாக்கத்தில் பகுப்பாய்வுத் திறன் களை வளர்த்துக் கொள்வது இன்றியமையாதது என்பதை அவர் வலியுறுத்தினார்.

இப்பயிற்சியில் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறையின் பேராசிரியர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிறப்பு வளவாளர்கள் இணைந்து செயல்முறைப் பயிற்சிகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி, தாவர மூலக் கூறு உயிரியல் மற்றும் உயிரித்தகவலியல் துறையின் உதவிப் பேராசிரியர் டாக்டர் ந.சரண்யா நன்றி உரையுடன் நிறைவுற்றது.



# கிசான் கோஸ்திஷ்–விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி



சிவகங்கை, ஜுலை 15

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி வட்டாரத்தில் வேளாண்மைத் துறை கீழ் (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக் கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் கிசான் கோஸ்திஷ்–விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி தத்தனி கிராமத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கண்ணங்குடி வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தங்கபாண்டியன் தலைமையேற்று வேளாண்மைத் துறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றியும், திட்டங்களின் பயன்பாடுகள், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர் சிவபிரியதர்ஷினி விவசாயிகளின் நில உடைமைகள் பதிவு, உழவன் செயலி மற்றும் குறுவை சாகுபடி திட்டம் பற்றி கூறினார். தோட்டக்கலைத் துறை உதவி தோட்டக்கலை அலுவலர் ராஜகுரு கூறியதாவது, பண்ணைக் குட்டை அமைத்தல், பழச்செடி மற்றும் காய்கறி விதைத்தொகுப்பு திட்டம், பிற திட்டங்களைப் பற்றி எடுத்துரைத்தார். கால்நடை பாரமரிப்புத் துறை கால்நடை உதவி மருத்துவர் தமிழரசன், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய் கட்டுப்படுத்தும் முறை பற்றி எடுத்து கூறினார். வேளாண்மை அறிவியல் நிலையம் குன்றக்குடி தொழில்நுட்ப வல்லுநர் விக்னேஷ் மண் மாதிரி சேகரித்தல் மண் பரிசோதனைமற்றும் சமச்சீர் உரமிடல் மற்றும் இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் குறித்த தொழில்நுட்பங்களான அனைத்து பயிர்களுக்கும் ஒருங் கிணைந்த முறையில் சமச்சீர் உரமிடல் பற்றியும் இயற்கையான முறையில் பயிர்களுக்கு எவ்வாறு உரமிடதல் பற்றி மற்றும் மீன் வளர்ப்பு பற்றி எடுத்து கூறினார்.

இவ்விழாவில் அட்மா திட்டப் பணியாளர்கள் சூர்யா, சதீஸ் குமார், துணை வேளாண்மை அலுவலர் மனோஜ்குமார், உதவி

விதை அலுவலர் சதீஸ்குமார், உதவி வேளாண்மை அலுவலர் ஆரோக்கிய அந்தோணி ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை முறைகள் மற்றும் விதை நேர்த்தி செயல் விளக்கங்களாக செய்து காண்பித்தனர். மேலும் இந்நிகழ்ச்சியில் அனைத்து துறை அலுவலர் மூலம் கண்காட்சி அமைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் மதிய உணவு மற்றும் பூச்சி நோய் விழிப்புணர்வு வழிகாட்டி வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் இறுதியில் வேளாண் திட்ட பிரசார பேரணி நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



# வேளாண்மையில் உயிர்க்கரியின் தாக்கம் மற்றும் உற்பத்தி முறைகள் : ஒரு விரிவான வழிகாட்டி

விவசாயக் கழிவுகளைத் தீயிட்டுக் கொளுத்துவதால் ஏற்படும் காற்று மாசு, ரசாயன உரங்களால் மலடாகும் விளைநிலங்கள், பருவமழைப் பொய்ப்பால் ஏற்படும் கடுமையான வறட்சி – இவை அனைத்தும் இன்றைய விவசாயிகளின் முதன்மைச் சவால்களாக உருவெடுத்துள்ளன.

இவற்றுக்கெல்லாம் மிகக் குறைந்த செலவில், நிரந்தரத் தீர்வாக அமைவது தான் உயிர்க்கரி தொழில்நுட்பம். இத்தொழில் நுட்பத்தைப் பற்றி மிக ஆழமாகவும், அதன் தயாரிப்பு மற்றும் பயன்பாட்டு முறைகளைப் பற்றியும் இங்கு விரிவாகக் காண்போம்.

**1. உயிர்க்கரி எவ்வாறு வேலை செய்கிறது?**

சாதாரண அடுப்புக் கரியை விட உயிர்க்கரி முற்றிலும் மாறுபட்டது. பயிர் எச்சங்களை ஆக்ஸிஜன் இல்லாத சூழலில் வெப்பப் படுத்துவதால், அதில் உள்ள மரப்பொருள் சிதைந்து, வெறும் நிலையான கார்பன் மட்டுமே எஞ்சுகிறது.

● **நுண்துளைகளின் கட்டமைப்பு** : உயிர்க்கரியை ஒரு நுண்ணோக்கி மூலம் பார்த்தால், அதில் கோடிக்கணக்கான சிறிய அறைகளும் துளைகளும் இருப்பதைக் காணலாம். இது மண்ணில் ஒரு 'நீர் சேமிப்புத் தொட்டி' போலவும், 'நுண்ணுயிர் தங்கும் விடுதி' போலவும் செயல்படுகிறது.

● **மின்சுமைப் பண்பு** : உயிர்க்கரியின் மேற்பரப்பில் எதிர்மறை மின்சுமை இருக்கும். இது மண்ணில் உள்ள நேர்மறை மின்சுமை கொண்ட ஊட்டச்சத்துக்களை (நைட்ரஜன், பொட்டாசியம், கால் சியம், மக்னீசியம்) தன்பால் ஈர்த்து வைத்துக் கொள்கிறது. மழை பெய்யும் போதோ அல்லது நீர் பாய்ச்சும் போதோ இந்தச் சத்துக்கள் நீரில் கரைந்து மண்ணின் அடிவயிற்றுக்குச் சென்று வீணாவதை இது தடுக்கிறது.

**2. உயிர்க்கரி தயாரிக்கும் முறைகள்**

உயிர்க்கரியை விவசாயிகளே தங்களது சொந்த நிலத்தில் மிக எளிதாகத் தயாரிக்க முடியும். அதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் செய்முறைகள் இதோ :

**அ) குழி முறை – பெரிய அளவிலான உற்பத்திக்கு**

● **படி 1 :** நிலத்தில் தலைகீழ் கூம்பு வடிவில் அல்லது சதுர வடிவில்

4 அடி ஆழம், 4 அடி அகலம் கொண்ட குழியை வெட்ட வேண்டும். கூம்பு வடிவம் காற்று உள்ளே நுழைவதைக் கட்டுப்படுத்த உதவும்.

● **படி 2 :** குழியின் அடியில் காய்ந்த இலைகள், சிறு குச்சிகளை வைத்து நெருப்பு மூட்ட வேண்டும்.

● **படி 3 :** நெருப்பு நன்றாகப் பிடித்தவுடன், அதன் மேல் விவசாயக் கழிவுகளை (நெல் உமி, கரும்புச் சக்கை, தென்னை மட்டை, பருத்திக் குச்சிகள்) அடுக்கடுக்காகப் போட வேண்டும்.

● **படி 4 :** கழிவுகள் எரியும்போது வெள்ளை நிறப் புகை வராமல், நீல நிறப் புகை வரும் வரை காத்திருக்க வேண்டும். புகை நீலமாக மாறும் போது ஆக்ஸிஜன் தீர்ந்துவிட்டது என்று அர்த்தம்.

● **படி 5 :** மேல் அடுக்கு கரியாக மாறியதும், அடுத்த அடுக்கைப் போட வேண்டும். குழி நிரம்பும் வரை இதைச் செய்ய வேண்டும்.

● **படி 6 :** இறுதியாக, கழிவுகள் சாம்பலாக மாறுவதற்குள் (Ashing) அதன் மீது தண்ணீரைத் தெளித்தோ அல்லது ஈரமான மண்ணைப் போட்டு காற்றுப் புகாதவாறு மூடியோ நெருப்பை அணைக்க வேண்டும்.

**ஆ) பீப்பாய் முறை – சிறு விவசாயிகளுக்கு**

ஒரு பழைய 200 லிட்டர் இரும்புப் பீப்பாயை எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் அடிப்பகுதியில் சிறிய காற்றுத் துளைகளை இட வேண்டும். பீப்பாயினுள் கழிவுகளை இறுக்கமாக நிரப்பி, மேற் பகுதியில் நெருப்பு மூட்ட வேண்டும். நெருப்பு மேலிருந்து கீழ் நோக்கி எரியும். கழிவுகள் அனைத்தும் கரியானதும், பீப்பாயை ஒரு மூடி கொண்டு காற்றுப் புகாமல் மூடி, 2 மணி நேரம் ஆறவிட வேண்டும்.

**3. ஊட்டமேற்றுதல்**

**மிக முக்கிய எச்சரிக்கை :** உயிர்க்கரியைத் தயாரித்தவுடன் அதை அப்படியே நேரடியாக நிலத்தில் இடக் கூடாது. ஏனெனில், அது மண்ணில் உள்ள ஈரம் மற்றும் சத்துக்களைத் தானே உறிஞ்சிக் கொண்டு, தற்காலிகமாகப் பயிர்களுக்குச் சத்துக் குறைபாட்டை ஏற்படுத்திவிடும். எனவே, அதை ‘ஊட்டமேற்றம்‘ செய்ய வேண்டும்.

**ஊட்டமேற்றும் முறை**

1. கரியை நன்கு தூளாக உடைக்க வேண்டும் (1 முதல் 5 மி.மீ அளவு).

2. 1 பங்கு உயிர்க்கரியுடன் 3 பங்கு தொழுவுரம் அல்லது மண்புழு உரம் கலக்க வேண்டும்.

3. இக்கலவையுடன் அமுதக்கரைசல், ஜீவாமிர்தம் அல்லது பஞ்சகவ்யா போன்ற திரவங்களை ஊற்றி, லேசான ஈரப்பதத்துடன் 2 வாரங்கள் நிழலில் வைக்க வேண்டும்.

4. இந்த 14 நாட்களில், உயிர்க்கரியின் நுண்துளைகளுக்குள் கோடிக்கணக்கான நன்மை செய்யும் நுண்ணுயிரிகளும், ஊட்டச் சத்துக்களும் குடியேறிவிடும். இப்போது இது நிலத்தில் இடத் தயாராக உள்ளது.

**4. மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள்**

உயிர்க்கரியை நிலத்தில் இடுவதால் மண்ணில் ஏற்படும் நீண்டகால மாற்றங்கள் கீழே உள்ள அட்டவணையில் விளக்கப் பட்டுள்ளன :

மண் கார அமிலத்தன்மை மண்ணின் அடர்த்தி நுண்ணுயிர் பெருக்கம் நைட்ரஜன் இழப்பு அமிலத் தன்மையுள்ள மண்ணைச் சீராக்கி, நடுநிலைத் தன்மைக்குக் கொண்டு வருகிறது. களி மண்ணைத் தளர்த்தியாகவும், மணற்பாங்கான மண்ணை இறுக்க மாகவும் மாற்றி அமைப்பினை மேம்படுத்துகிறது. மண்ணில் உள்ள மண்புழுக்கள் மற்றும் நன்மை செய்யும் பூஞ்சைகளின் எண்ணிக்கை 200% வரை அதிகரிக்கிறது. உரங்கள் நீரில் அடித்துச் செல்லப்படுவது 50% வரை தடுக்கப்படுகிறது.

**5. பயிர்களின் மகசூல் மற்றும் பொருளாதார லாபம்**

தமிழ்நாட்டின் முதன்மைப் பயிர்களில் உயிர்க்கரியின் தாக்கம் குறித்துப் பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன:

● **நெல் மற்றும் தானியங்கள் :** தூர்கள் அதிகமாக வெளிவரும். வறட்சியைத் தாங்கி வளரும் திறன் மேம்படுவதால், கதிர் பிடிக்கும் பருவத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டாலும் மகசூல் பாதிப்பது இல்லை. சராசரியாக 15 – 20% மகசூல் கூடுகிறது.

● **பருத்தி மற்றும் கரும்பு :** வேர்கள் ஆழமாக ஊடுருவிச் சென்று சத்துக்களை உறிஞ்சுகின்றன. கரும்பில் சர்க்கரைச் சத்து அதிகரிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.


● **தோட்டக்கலைப் பயிர்கள் (தக்காளி, மிளகாய், கத்தரி) :** மண்ணின் ஈரப்பதம் தொடர்ந்து கிடைப்பதால், பூக்கள் உதிர்வது குறைந்து, காய்களின் அளவு மற்றும் தரம் கூடுகிறது.

**பொருளாதாரக் கணக்கீடு :** வழக்கமான விவசாயத்தில் ஒவ்வொரு வருடமும் உரம் மற்றும் தண்ணீருக்கான செலவு அதிகரித்துக் கொண்டே செல்லும். ஆனால், உயிர்க்கரி மண்ணில் சிதைவடைய குறைந்தது 500 முதல் 1000 ஆண்டுகள் ஆகும்.

எனவே, ஒருமுறை நிலத்தில் முதலீடு செய்தால், அடுத்த பல தலைமுறைகளுக்கு அதன் பலன் நீடிக்கும். ரசாயன உரங்களின் தேவை பாதியாகக் குறைவதால், விவசாயிகளின் நிகர லாபம் கணிசமாக உயர்கிறது.


### 6. உலகளாவிய கார்பன் வர்த்தகம்

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் உயிர்க்கரி உலக அளவில் பெரும் பங்கு வகிக்கிறது. மரங்களும் தாவரங்களும் மட்கும் போது, அவற்றில் உள்ள கார்பன் டை ஆக்சைடு மீண்டும் காற்றில் கலந்து விடுகிறது. ஆனால், அவற்றை உயிர்க்கரியாக மாற்றும் போது, அந்த கார்பன் காற்றில் கலக்காமல் மண்ணுக்குள் நூறு ஆண்டுகளுக்குச் சிறைபிடிக்கப்படுகிறது. வருங்காலத்தில், உயிர்க்கரியைப் பயன்படுத்தும் இந்திய விவசாயிகளுக்கு கார்பன் கிரெடிட் மூலமாகப் பன்னாட்டு நிறுவனங்களிடம் இருந்து கூடுதல் வருமானம் நேரடியாகக் கிடைப்பதற்கான திட்டங்கள் தற்போது துவக்கப்பட்டு வருகின்றன. இது விவசாயிகளுக்கு ஒரு மாற்று வருவாய் மாடலாக அமையும்.




**முடிவுரை :** வேளாண்மையில் உயிர்க்கரி என்பது ஏதோ ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்ல; அது அமேசான் காடுகளின் பழங்குடி மக்கள் கையாண்ட 'டெர்ரா பிரெட்டா' என்ற பாரம்பரிய உத்தியின் நவீன வடிவமே ஆகும். ரசாயன உரங்களாலும், தீவிர சாகுபடி முறைகளாலும் மலடாகி வரும் நமது தமிழ்நாட்டு விளைநிலங்களை மீட்டெடுக்க இதுவொரு மிகச்சிறந்த மற்றும் செலவில்லாத இயற்கை ஆயுதம்.

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா.ரா மற்றும் பாமா.ம (இளங்கலை வேளாண் மாணவி), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# விசிறி வாழையை வீட்டின் முன் ஏன் வளர்க்க வேண்டும்?



பெரும்பாலான பங்களாவாசிகள் விசிறி வாழையை விரும்பி தங்களுடைய வீடுகள் முன் வளர்க்க விரும்புகிறார்கள். இதற்கான காரணம் என்னவென்றால் அதனுடைய அழகும் விசிறி போன்ற அமைப்பு தான். அதை பற்றி விரிவாக பார்ப்போம்.

### விசறி வாழை

இதை ஆங்கிலத்தில் TRAVELLERS TREE (PALM) என்று தான் அழைக்கப்படுகின்றது. இது மடகாஸ்கர் தீவுவை தாயகமாக கொண்டது. இதனுடைய அறிவியல் பெயர் (RAVENALA MADAGASCARIENSIS). இந்த மரம் கிண்ணம் போன்ற தண்டு பகுதியில் தண்ணிரை சேகரித்து வைக்கும். அந்த காலத்தில் வழிபோக்கர் தங்களுடைய தாகம் தீர்க்க இதனை வெட்டி தண்ணீரை பருகுவார்கள். அதனால் தான் என்னவோ இந்த மரத்திற்கு  டிராவலர் பாம் என்று பெயர் வந்ததாக தெரிகிறது.

### EAST WEST TREE

இந்த விசறி வாழைக்கு EAST WEST TREE  என்ற பெயரும் உள்ளது. இது ஒரு அதிசய தாவரமாகும். இந்த விசிறி வாழை எப்போதும் கிழக்கு மேற்காக பகல் முழுவதும் சூரிய ஒளி படும்மாறு பக்கவாட்டில் நிற்பது தான்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### இதனுடைய குணாதிசயங்கள்

இது காய்க்காது, குலை தள்ளாது. இதனுடைய இலைகளை போட்டு உணவருந்த முடியாது. இது ஒரு அலங்கார மரம் (ORANMENTAL TREE). மயில் மோகத்தை பார்த்தால் தான், தனது தோகையை விரித்து ஆடும், ஆனால் விசிறி வாழையை எப்போதும் தனது தோகையை ( வாழை இலை) விரித்து நிற்கும்.

இது வாழைபழம் போன்ற நீலநிற விதைகள் CAPULES களை தான் உண்டாக்கும். இது சாப்பிட தகுதியற்றது. இதனுடைய உலர்ந்த தண்டுகளை வைத்து கூரை வேயப்பட பயன்படுகிறது. உறுதியான நடுத்தண்டு கட்டிடம் கட்டிட பயன் படுத்தப்படுகின்றது.

### மடகாஸ்கர் முதல் பங்களா வீடு வரை?

இந்த விசிறி வாழை மடகாஸ்கர் தீவின் அரசின் சின்னமாகும். அந்த காலத்தில் பெரிய பெரிய நகரங்களில் விசிறி வாழை இல்லாத பங்களாக்களே இல்லாத நிலையில் தான் இருந்தது. இன்றும் அந்த மோகம் தொடர்கிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தோட்டக்கலைத்துறை சார்பில் தோட்டக்கலை உற்சவம் 2026 நிகழ்ச்சி



கோயம்புத்தூர், ஜுலை 15

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தோட்டக் கலைத்துறை சார்பில் தோட்டக்கலை உற்சவம் 2026 நிகழ்ச்சி 15.7.26 அன்று நடைபெற்றது. டாக்டர் எம்.கருதமணி, காபி வாரியம், தலைமை தாங்கினார். வெங்கடேசன், டீன், வாழ்த்துரை வழங்கினார். விழாவில் பெரியகுளம் முதல்வர் சரஸ்வதி, திருச்சி முதல்வர் ஜானவி, பையூர் முதல்வர் அனிசா ராணி, கலவை முதல்வர் உமாபதி வாழ்த்திப் பேசினர்.

# நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்க அழைப்பு

செங்கல்பட்டு, ஜூலை 15

செங்கல்பட்டு மாவட்ட விவசாயிகள், வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திருந்திய நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொண்டு பரிசுத் தொகைகளை வெல்லுமாறு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) து.செல்வபாண்டியன் கேட்டுக் கொண்டுள்ளார்.



பயிர் விளைச்சல் போட்டியானது நெல் சாகுபடியில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடைபிடித்து பயிர் செய்த விவசாயிகளுக்கு மாநில அளவில் நடத்தப்படுகிறது.

இப்போட்டியில் மாநிலத்திலேயே அதிக மகசூல் பெற்ற விவசாயிக்கு ரூ.5,00,000/- மற்றும் பதக்கமும், சி நாராயண சாமி நாயுடு நெல் உற்பத்திக்கான விருது என்ற பெயரில் விருதும் வழங்கப்பட உள்ளது.

**தகுதி**

- பயிர் விளைச்சல் போட்டியில் போட்டியிடும் விவசாயி குறைந்தபட்சம் 2 ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். மேலும், தனியார் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் திருந்திய நெல் சாகுபடி/இயந்திர நடவு செய்த முன்னோடி விவசாயியாக இருக்க வேண்டும்.

- நெல் பயிருக்கான பிற பயிர் விளைச்சல் போட்டிகளில் பங்குபெறும் விவசாயிகள் இந்த விருதிற்கான போட்டியில் பங்கு பெற இயலாது.

- ஒருமுறை பரிசு பெறும் விவசாயி அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு போட்டியில் கலந்து கொள்ள இயலாது.

- நில உரிமைதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள்.

- பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அறிவிக்கை செய்யப் பட்ட சன்ன நெல் இரகங்களை மட்டுமே பயிர் செய்திருக்க வேண்டும்.

- பயிர் விளைச்சல் போட்டியில் பங்கு பெறும் விவசாயி பதிவு கட்டணமாக ரூ.150/- (ரூபாய் நூற்றி ஐம்பது மட்டும்) செலுத்த வேண்டும். பதிவு கட்டணத்திற்கான ரசீது விவசாயிகளுக்கு வழங்கப்படும். பதிவு கட்டணம் எந்த சூழ்நிலையிலும் திரும்பித் தரப்பட மாட்டாது.

- போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகள் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து, பதிவுக் கட்டணம்ரூ. 150/-ஐ, தங்களது சாகுபடி நில விவரங்களான சிட்டா மற்றும் அடங்கல் ஆகிய ஆவணங்களை சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

● மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயி 31.03.27 ஆம் தேதிக்குள் பதிவு கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். மேலும், 15.04.27 ஆம் தேதிக்குள் அறுவடை முடித்திட வேண்டும்.

● சி நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறன் - விருதுக்கான போட்டியில் கலந்து கொள்பவர் பயிர் அறுவடை தேதியை 15 நாட்களுக்கு முன்னதாகவே சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநருக்கு நேரிலோ அல்லது பதிவு தபாலிலோ தெரிவித்திட வேண்டும்.

வெற்றியாளர்களை அறிவிப்பதில் வேளாண்மை இயக்குநர் தலைமையிலான மாநில அளவிலான குழுவின் முடிவே இறுதியானது.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மைத் துறை அலுவலர்களை அணுகி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## அரசு விதைப்பண்ணைகளில் விதைச்சான்றளிப்பு உதவி இயக்குநர் ஆய்வு!

கோயம்புத்தூர், ஜூலை 15

கோவை மாவட்டம், சர்கார்சாமக்குளம் வட்டாரத்தில் வெள்ள மடை, அக்ரஹார சாமக்குளம் கிராமங்களில் அமைக்கப் பட்டுள்ள சோளம் - கோ 32 மற்றும் தட்டைப்பயறு வம்பன் 4 விதைப்பண்ணைகளை இரா.சக்திவேல் விதைச்சான்றளிபு உதவி இயக்குநர் ஆய்வு செய்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், தரமான நல்ல முளைப்பு திறன் கொண்ட சான்று விதைகள் விவசாயிகளை சென்று அடையும் பொருட்டு அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண்மை



உதவி இயக்குநர், அரசு விதை உற்பத்தியாளராக செயல்பட்டு விவசாயிகளுக்கு வல்லுநர், ஆதார விதைகள் வழங்கப்பட்டு விவசாயிகளால் விதைப்பண்ணைகளாக அமைக்கப்பட்டு சான்று விதைகளாக அரசால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அவ்வாறு அமைக்கப்படும் விதைப்பண்ணைகளை சுற்றி வேறு பயிர்கள் சோளம் எனில் 200 மீட்டர், தட்டை எனில் 10 மீட்டர் சுற்றளவில் இருக்க கூடாது. மேலும் இன தூய்மை காக்கவிதைப்பண்ணைகளில் களவன்கள் (வேறு இரக பயிர்கள்) இருந்தால் உடனுக்குடன் நீக்கிட வேண்டும்.

நல்ல பயிர் எண்ணிக்கையுடன் பூச்சி நோய் தாக்குதல் இன்றி பராமரிக்க வேண்டும். இவ்வாறு அரசால் பதிவு செய்யப் படும் விதைப்பண்ணைகள் விதைச்சான்றளிப்பு துறை அலுவலர்களால் பயிர்களுக்கு ஏற்ப சோளம் எனில் வளர்ச்சி பருவம், பூப்பருவம், முதிர்ச்சி பருவம் ஆகிய பருவங்களில் மற்றும் தட்டைப்பயறு பயிர் எனில் பூப்பருவம், முதிர்ச்சி பருவம் என பயிர்களுக்கு ஏற்ப 2-3 முறை ஆய்வு செய்யப்படும்.

ஆய்வின் போது பயிர் விலகுதூரம், களவன்கள் கணக்கெடுப்பு (சோளம் - 0.05 % மற்றும் தட்டை - 0.1 %) மட்டும் அனுமதிக்கப்படும், மகசூல் கணக்கீடு ஆகிய மேற்கொள்ளப்படும்.

ஆய்வில் தேறும் விதைப்பண்ணைகள் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு பின் சுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு விதை மாதிரி அரசு விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, முளைப்பு திறன் (75% இருத்தல் வேண்டும் பயிர்களுக்கு ஏற்ப மாறுபடும (98%), இனத்தூய்மை ஆகியவை ஆய்வு செய்யப்படும். அவ்வாறு விதை பரிசோதனையில் தேறும் விதைகள் சான்றட்டைப் பொருத்தப்பட்டு விவசாயிகளுக்கு சான்று விதை களாக சென்றடையும். மேலும் விதைப்பண்ணை அமைக்கும் விவசாயிகள் நல்ல மகசூல் பெறுவதுடன் அரசே அதனை நல்ல விலைக்கு கொள்முதல் செய்வதால் நல்ல லாபம் ஈட்டலாம் என தெரிவித்தார்.

மேலும், ஆய்வின் போது விதைச்சான்று அலுவலர் ப.பிரியதர்ஷினி மற்றும் உதவி விதை அலுவலர் விஜய் ஆகியோர் உடன் இருந்தனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தக்காளி பயிரைத் தாக்கும் நோய்கள்



**முன்பருவ இலைக்கருகல் அறிகுறிகள்**

● இது தக்காளியின் எந்த வளர்ச்சி நிலையிலும் பொதுவாக இலைகளின் மீது ஏற்படும் நோய் ஆகும்.

● பூஞ்சை இலைகளை தாக்கும் பொழுது இலையில் புள்ளிகள் ஏற்பட்டு கருகத் தொடங்கும். முன்பருவ இலைக்கருகல் அதிகமாக வயது முதிர்ந்த இலைகளில் சிறியதாக கருப்பு காயங்களாக காணப்படும்.

● புள்ளிகள் பெரிதாகி மற்றும் பொதுவான வளையங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காணப்படும்.

● திசுக்களை சுற்றியுள்ள புள்ளிகள் மஞ்சள் நிறமாகின்றன. அதில் வெப்பநிலை அல்லது ஈரப்பதம் ஏற்படும்பொழுது அதிக அளவில் இலைகள் இறந்து விடுகின்றன.

● இலையைப் போன்றே தண்டுகளிலும் காயங்கள் ஏற்படுகின்றன.



● பின்பருவ அழுகல் நோயினால் தாவரம் பிடுங்கி நடும் பொழுது பூஞ்சை யால் பாதிக்கப்பட்ட சில சமயங்களில் இறந்து விடுகிறது. இந்த பூஞ்சை புள்ளி வட்டம் அல்லது தண்டு வழியாக பழங் களை பாதிக்கிறது.

● காயங்கள் பொதுவாக பழம் முழுவதிலும் காணப்படு கின்றன. பொதுவான வளையங்கள் பழங்களில் காணப்படும்.

**மேலாண்மை**

● பயிர் குப்பைகளை அகற்றுதல் மற்றும் அழித்தல்

● பயிர் சுழற்சி முறைகளை பின்பற்றுவதன் மூலம் நோய் தாக்கத்தை குறைக்கலாம்.

● திறம்பட நோயைக் கட்டுப்படுத்த மேன்கோசெப் 0.2% தெளிக்க வேண்டும்.

### ஃபுசேரியம் வாடல்



### அறிகுறிகள்

● நோயின் முதல் அறிகுறியாக கிளை நரம்புகள் தெளிவாகி இலைகளில் பசுமை சோகை ஏற்படுகிறது.

● இளம் இலைகள் கருகி சில நாட்களில் இறந்துவிடும். இலைக்காம்பு மற்றும் எல்லா இலைகளும் வாட ஆரம்பிக்கும்.



● இளம் இலைகளின் கிளை நரம்புகள் வெளியே தெரிந்து இலைக்காம்பு உதிர ஆரம்பிக்கும். விளை நிலங்களில் கீழ் இலைகள் முதலில் மஞ்சள் நிறமாக மாறும் மற்றும் சிற்றிலைகள் கருகி இறந்துவிடும்.

● அறிகுறியின் தொடர்ச்சியாக மற்ற இலைகளுக்கும் பரவ ஆரம்பிக்கும். கடைசி நிலையில் வாஸ்குலர் அமைப்பு பழுப்பு நிறமாக மாறுகிறது. தாவர வளர்ச்சி குன்றி பின்பு இறந்துவிடும்.

### மேலாண்மை



● பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றி அழித்துவிட வேண்டும்.

● கார்பென்டிசம் (0.1%) கொண்டு பாதிக்கப்பட்ட பகுதிகளை மூழ்கச் செய்ய வேண்டும்.

● பயிர் சுழற்சி முறையில் சாராத் தாவரங்களை அதாவது தானியங்களைப் பயிரிட வேண்டும்.

தகவல் : *அஜிதா க, மோனிகா ஸ்ரீ பெ, நான்காம் ஆண்டு மாணவர், ஜெயமுருகன் செ, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல் துறை), கிருஷ்ணா வேளாண் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, ஸ்ரீரெங்கபுரம், மதுரை - 625 532.*



# ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் மற்றும் மாடித் தோட்டம் பற்றிய பயிற்சி

திருச்சி, ஜூலை 15

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், நவீன தொழில் நுட்பங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் மற்றும் மாடித்தோட்டம் குறித்த ஒரு நாள் நிலையப் பயிற்சி 21.07.26 (செவ்வாய்கிழமை) அன்று நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் நமது வீட்டின் அன்றாட தேவைகளுக்கு ஏற்ப காய்கறி தோட்டம் அமைத்து நமக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களுடன் பல தரப்பட்ட மருத்துவ குணங்களைக் கொண்ட காய்கறிகளை நாமே உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும் மாடித்தோட்டம் அமைப்பு செயல் முறை, வளர்ப்பு ஊடகங்கள், குழித்தட்டு நாற்றங்கால், பழச்செடிகள் உற்பத்தி போன்ற தலைப்புகளின் கீழ் செயல்விளக்கப் பயிற்சி மற்றும் விளக்கம் அளிக்கப்பட உள்ளது. இதன் மூலம் நமது அன்றாட ஊட்டச்சத்து தேவை பூர்த்தி செய்யப்படுவதோடு ரசாயனம் இல்லாத உணவு கிடைக்கப் பெறுகிறது.

இதில் பங்கு கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் மற்றும் மேலும் விபரங்கள் அரிய சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலை யத்தில் 0431-2962854, 88381 26730, 98432 18818 என்ற எண்களில் அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறு / தகவலை அறியுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இத்தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.



# காரீப் பருவ பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

மதுரை, ஜுலை 15

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு மற்றும் மதுரை மேற்கு வட்டாரத்தில் இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதிஉதவி வழங்கவும், அவர்களை விவசாயத்தில் நிலை பெறச் செய்யவும் வேளாண்மைத் துறை மூலம் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.




நடப்பு 2026-27ம் ஆண்டு காரீப் பருவத்திற்கு விவசாயிகள் நெல் பயிர் ஒரு ஏக்கருக்கு ரூ.745 பிரிமியத் தொகை செலுத்த வேண்டும். விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் வறட்சி, வெள்ளம், புயல், சூறாவளி காற்று, அதிக பரப்பளவில் பூச்சி நோய் தாக்குதல், நிலச்சரிவு மற்றும் இயற்கை சீற்றத்தினால் தீப்பிடித்தல் ஆகிய இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஏற்றவாறு பயிர் அறுவடை பரிசோதனை அடிப்படையில் நெல் பயிருக்கு பயிர் காப்பீட்டு தொகையாக ஏக்கருக்கு ரூ.37,250/- வழங்கப்படும். நடப்பு காரீப் பருவத்தில் நெல் I (குறுவை) பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய ஜீலை 31ம் தேதி கடைசி நாள் ஆகும்.

வங்கியில் பயிர்க் கடன் பெறும் மற்றும் பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் தங்களது விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம். பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் முன்மொழிவு படிவம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு பயிர் சாகுபடி அடங்கல், நடப்பில் உள்ள சேமிப்பு வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் நில உரிமை பட்டா ஆகிய ஆவணங்களுடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்கள் (இ-சேவை மையங்கள்) மூலமாக உரிய பிரிமியத் தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்ய வேண்டுமாறு மதுரை மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன் கேட்டுக் கொள்கிறார்.

# மின்னணு பயிர் கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்ள தன்னார்வலர்களுக்கு வாய்ப்பு!

திருச்சி, ஜுலை 15

தமிழ்நாடு முழுவதும் பயிர் சாகுபடி பரப்புகளை பயிர் வாரியாக சரியாக கணக்கெடுக்க மொபைல் செயலி பயன்படுத்தி மின்னணு முறையில் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடப்பு காரிப் பருவத்தில் 15,02,312 உட்பிரிவுகளில் இதுவரை 43,820 உட்பிரிவுகளுக்கு மின்னணு பதிவு முடிவு பெற்றுள்ளது. வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகத் துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறையினரோடுகிராமங்களில் உள்ள தன்னார்வலர்களும் ஈடுபட்டுள்ளனர். மின்னணு பயிர் கணக்கெடுப்பு மேற்கொள்ளும் நபர்களுக்கு அவர்கள் பதிவு

செய்யும் ஒவ்வொரு தரிசு நில உட்பிரிவுக்கு ரூ.3+, தனி பயிருக்கு ரூ5, தன்னார்வலர்களுக்கு கூடுதல் பயிருக்கும் ரூ.2, ( அதிகபட்சமாக ரூ.9 ) மலைப்பயிர்களுக்கு ரூ.10 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.

இந்த பணிகளில் ஈடுபட விரும்பும் தன்னார்வலர்கள் தங்கள் ஆண்ட்ராய்ட் மொபைலில் அதற்கான செயலியை பதிவிறக்கம் செய்து தங்கள் பகுதியின் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு கணக்கீடு பணியில் ஈடுபட வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார், மேலும் இவர்களுக்கு இப்பணியினை மேற்கொள்வதற்கான பயிற்சியை அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்கு நர்கள் வழங்கிட தயாராக உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# மதுரை கிழக்கு மற்றும் மேற்கு வட்டாரத்தில் குறுவை சிறப்பு சாகுபடி தொகுப்பு திட்டம்

மதுரை, ஜுலை 15

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு மற்றும் மதுரை மேற்கு வட்டாரத்தில் குறுவை சிறப்பு சாகுபடி திட்டம் செயல்படுத்திட ரூ.22.99 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெல் சாகுபடி பரப்பினை அதிகரித்து உணவு உற்பத்தி அளவினை உயர்த்திட குறுவை சிறப்பு சாகுபடி திட்டத்தின் கீழ் மானிய விலையில் வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. விவசாயிகள் நெல் இயந்திர நடவு/நேரடி நெல் விதைப்பிற்கு ஏக்கருக்கு ரூ.4000 வீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நெல் நுண்ணூட்டம், உயிர் உரங்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

10 வருடத்திற்கு மேற்பட்ட சான்று பெற்ற நெல் இரகங்களுக்கு கிலோவிற்கு 10 ரூபாயும், பத்து வருடங்களுக்கு உட்பட்ட சான்று பெற்ற நெல் இரகங்களுக்கு 20 ரூபாயும் மானியமாக வழங்கப் படுகிறது. மேலும், சான்று விதை உற்பத்தி மானியத்தில் கிலோவிற்கு ரூ.8 வீதம் வழங்கப்படுகிறது.

ஒரு விவசாயிக்கு நெல் இயந்திர நடவு / நேரடி நெல் விதைப்புக்கு 2 ஏக்கர் வரையிலும், நெல் நுண்ணூட்டம், உயிர் உரங்கள், சான்று பெற்ற விதைகள் ஆகியவை ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் வரையிலும் மானியத்தில் பெற்று பயன் பெறலாம்.

மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் தக்கைப்பூண்டு விதைகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட தக்கைப்பூண்டு விதைகள் மண்ணின் வளத்தை அதிகரிக்கவும், உகந்த இயற்கை உரமாக மாற்ற தக்கைப்பூண்டு சிறந்த பயிராகும். மண்ணில் நைட்ரஜனை நிலைநிறுத்தி, உவர் மற்றும் மணல் நிலங்களை சீர்படுத்துவதுடன், மண்ணில் நீரை தேக்கி வைக்கும் திறனை அதிகப்படுத்துகிறது.

மேலும் விபரங்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர், மதுரை மேற்கு அலுவலகத்தை தொடர்பு கொண்டு விவசாயிகள் பயன் பெறுமாறு மதுரை மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன் கேட்டுக்கொள்கிறார்.

# ரோவர் வேளாண்மை கல்லூரியில் 15வது ஆண்டு விளையாட்டு விழா

பெரம்பலூர், ஜூலை 15

பெரம்பலூர் தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் 15.07.26 புதன்கிழமை அன்று 15வது ஆண்டு விளையாட்டு விழா உற்சாகமாக நடைபெற்றது.

இவ்விழாவில், பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் வி.லலித்குமார், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களின் விளையாட்டுத் திறமையைப் பாராட்டி, விளையாட்டு மனப்பான்மை, ஒழுக்கம் மற்றும் உடற்தகுதியின் அவசியத்தை வலியுறுத்தினர். பின் விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசினை வழங்கி விழாவினை சிறப்பித்தார்.




ரோவர் கல்விக் குழும நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் கே.வரதராஜன் நிகழ்ச்சிக்கு

தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஜான் அசோக் வரதராஜன் முன்னிலை வகித்தார். மாணவர்களின் இணை விளையாட்டு செயலாளர் மோனிகா ஸ்ரீ வரவேற்புரை வழங்கினார். விளையாட்டுச் செயலாளர் எஸ். லோகேஷ் விளையாட்டு அறிக்கையை வாசித்தார்.

கல்லூரி முதல்வர் முனைவர் க.இறைவன் அருட்கனி அய்யநாதன் சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாணவர் மன்ற ஆலோசகர் எம்.அப்துல் ரகுமான் மற்றும் உடற்கல்வி உதவி ஆசிரியர்கள் .சி கலையரசன் மற்றும் ப.வாசுகி ஆகியோர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினர்.

நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். இறுதியாக, மாணவர்களின் தடகளச் செயலாளர் ஏ. முஹிரட்சயா நன்றியுரை ஆற்றினார்.




பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் அக்ரி ராதாகிருஷ்ணன், மரியாதை நிமித்தமாக பெரம்பலூர் சட்டசபை உறுப்பினர் சிவகுமாரை சந்தித்து தான் செய்யும் விவசாயிகளுக்கான பணிகளை எடுத்துரைத்து வாழ்த்து பெற்றார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**